செய்தி வெளியீடு எண் : 14 நாள் :08.06.2020

**தேனி மாவட்டத்தைச் சேர்ந்த 10ம் வகுப்பு மற்றும் 11ம் வகுப்பு பயின்று வரும் பார்வையற்ற / காது கேளாத மாணவ, மாணவியர்கள் பொதுத்தேர்வு எழுதும் பிற மாவட்ட மையங்களுக்கு 3 அரசு சிறப்புப் பேருந்துகள் மூலம் பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டனர் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல் :**

******

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (08.06.2020) மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், தேனி மாவட்டத்தைச் சேர்ந்த 10ம் வகுப்பு மற்றும் 11ம் வகுப்பு பயின்று வரும் பார்வையற்ற / காது கேளாத மாணவ, மாணவியர்கள் பொதுத்தேர்வு எழுதும் பிற மாவட்ட மையங்களுக்கு 3 அரசு சிறப்புப் பேருந்துகள் மூலம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதுகுறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

தமிழக அரசு மாற்றுத்திறனாளிகளின் நலன் கருதி அவர்கள் பயன்பெறும் வகையில், பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து பயன்பெறச் செய்து வருகிறது. மேலும், தற்சமயம கோவிட் - 19 கொரோனா வைரஸ் தடுப்பு ஊரடங்கு அமலில் உள்ளதால், 10ம் வகுப்பு மற்றும் 11ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு எழுதும் மாற்றுத்திறனாளிகள் மாணவ, மாணவியர்களின் நலனை கருத்தில் கொண்டு, பிற மாவட்டங்களில் பயின்று வரும் அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் சம்பந்தப்பட்ட தேர்வு எழுதும் மையங்கள் / சிறப்புப் பள்ளிகளுக்குச் சென்று தேர்வு எழுதும் பொருட்டு, பேருந்து, உணவு, சிற்றுண்டி, குடிநீர் ஆகியவை வழங்கி பாதுகாப்பாக வழி அனுப்பி வைத்திட அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, தேனி மாவட்டத்தைச் சார்ந்த பார்வையற்ற / காது கேளாத மாணவர்கள், 10ம் வகுப்பு மற்றும் 11ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு எழுதிட தாங்கள் பயின்ற மாவட்டங்களுக்கு, தேர்வு எழுதும் மையங்கள் / சிறப்புப் பள்ளிகளுக்கு அனுப்பி வைத்திடும் பொருட்டு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் 3 அரசு சிறப்புப் பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சிறப்பு பேருந்துகளில் தேர்வு எழுதுவதற்காக பார்வையற்ற / காது கேளாத மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்கள் 10 நபர்கள் மற்றும் பாதுகாவலர் ஒருவர் என் மொத்தம் 20 நபர்கள் சென்னை / சிவகங்கை / மதுரை / விருதுநகர் ஆகிய வெளிமாவட்டங்களுக்கு தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து 3 பேருந்துகளில் பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டனர்.

மேற்கண்ட மாணவர்கள் மற்றும் பாதுகாவலர்கள் வெளிமாவட்டங்களுக்கு செல்வதால் அவர்களின் உடல்நிலையினை முன்னெச்சரிக்கையாக பரிசோதிக்கும் பொருட்டு துணை இயக்குநர், சுகாதார பணிகள், தேனி மூலம் மருத்துவக்குழு ஏற்பாடு செய்யப்பட்டு அனைவருக்கும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மேலும் அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் பாதுகாப்பு சாதனங்கள், முகக்கவசம், காதுகேளாதோருக்கான பிரத்யேக முகக்கவசம் (TRANSPARENT MASK) ஆகியவைகளும் மற்றும் பயணம் மேற்கொள்ளும் மாணவ, மாணவியர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்/பாதுகாவலர்களுக்கு காலை சிற்றுண்டி, பிஸ்கட்டுகள், குடிநீர் ஆகியவைகள் வழங்கப்பட்டு, நல்ல முறையில் தேர்வு எழுதிட அறிவுறுப்பட்டது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் க.சகுந்தலா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஆ.செந்தில் அண்ணா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலக பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**